AL/2014/25C/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்**
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2014**

| | | | |
|---|---|---|---|
| ඉතිහාසය II (I කොටස) | **25-C** | **T** | **II** |
| வரலாறு II (பகுதி I) | | | |
| History II (Part I) | | | |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**நவீன உலக வரலாறு - கி.பி. 1500 - 1989**

சுட்டெண் : ...........................

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்தில்** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது.
  ஒரு வினாவுக்கு உரிய சரியான விடையைத் தெரிவு செய்து பின், அதனை **இப்பத்திரத்திலே அறிவுறுத்தல்களுக்கமையக் குறிப்பிடுக.**
* **இவ்வினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.**
* இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது பகுதி **I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் பகுதி **II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

* **1** முதல் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

1. (1) கொக்கைடோ (2) ஹிரோஷிமா (3) ஹொன்ஸு
   (4) சிகோகு (5) கியூஷூ (......)

2. (1) வொட்டி செல்லி (2) லியனார்டோ டாவின்சி (3) கலிலியோ கலிலி
   (4) மைக்கேல் அஞ்சலோ (5) ற.்.பேயல் (......)

3. (1) இப்ரகிம் லோடி (2) பாபூர் (3) அக்பர்
   (4) ஷாஜகான் (5) ஔரங்கசீபு (......)

4. (1) ஷெ.்.பீல்ட் (2) மன்செஸ்ற்ரர் (3) லிவர்பூல்
   (4) பேர்மிங்ஹாம் (5) புளோரிடா (......)

5. (1) கோண்வலிஸ் பிரபு (2) வெலஸ்லி பிரபு (3) வென்ரிங் பிரபு
   (4) ரொரிங்டன் பிரபு (5) டல்ஹவுஸி பிரபு (......)

6. (1) கொலம்பியா (2) அல்ஜீரியா (3) நைஜீரியா
   (4) லிபியா (5) ஸாம்பியா (......)

7. (1) V.I. லெனின் (2) றொற்ஸ்கி (3) கோர்னிலோவ்
   (4) ஸ்டாலின் (5) புகாரின் (......)

8. (1) ஜவகர்லால் நேரு (2) சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் (3) லால் பகதூர் சாஸ்திரி
   (4) இந்திரா காந்தி (5) மொரார்ஜி தேசாய் (......)

9. (1) வட அத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனம் (NATO)
   (2) வோர்ஷோ உடன்படிக்கை
   (3) ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம் (UNESCO)
   (4) தென்கிழக்காசியா உடன்படிக்கை (SEATO)
   (5) மத்திய உடன்படிக்கை நிறுவனம் (CENTO) (......)

10. (1) நிக்கிதா குருஷேவ் (2) யூரிககாரின் (3) லியோனிட் ப்ரெஷ்னேவ்
    (4) யூரி அந்திரப்போவ் (5) மிகைல் கொர்ப்பச்சேவ் (......)

[பக். 2 ஐப் பார்க்க

- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

11. (1) பேரபன் - பிரான்ஸ்
(2) ஸ்ருவட் - இங்கிலாந்து
(3) நுகுயென் - வியெட்னாம்
(4) கொங்குவாங் - பர்மா
(5) மஞ்சு - சீயம் (......)

12. (1) முப்பதாண்டுப் போர் - இங்கிலாந்து, ஸ்பானியா
(2) ஏழாண்டுப் போர் - இங்கிலாந்து, பிரான்ஸ்
(3) அபின் போர் - இங்கிலாந்து, சீனா
(4) கிறிமியப் போர் - ரஷ்யா, துருக்கி
(5) ஏழுவாரப் போர் - ஒஸ்திரியா, பிரஷ்யா (......)

13. (1) ஆர்ஜென்டீனா - ஸ்பெயின் மொழி
(2) ஜமெய்க்கா - ஆங்கில மொழி
(3) ஜோர்டன் - அராபிய மொழி
(4) டென்மார்க் - டேன் தேச மொழி
(5) இத்தாலி - கிரேக்க மொழி (......)

14. (1) மாண்புமிகு புரட்சி - உரிமைகள் மசோதா
(2) அமெரிக்கப் புரட்சி - சுதந்திரப் பிரகடனம்
(3) பிரெஞ்சுப் புரட்சி - மனித உரிமைகள் பிரகடனம்
(4) சர்வதேச சங்கம் - பொதுவுடமை விஞ்ஞாபனம்
(5) ஐக்கிய நாடுகள் சபை - சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் (......)

15. (1) ஆபிரகாம் லிங்கன் - ஐக்கிய அமெரிக்கா
(2) முகம்மது அலி ஜின்னா - பாகிஸ்தான்
(3) அச்மட் சுக்கானோ - மலேசியா
(4) கமால் அப்துல் நஸார் - எகிப்து
(5) பிடல் காஸ்த்றோ - கியூபா (......)

- **16 - 25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே தரப்படவில்லை. **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள **ஐந்து** சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். **சரியான** சேர்மானத்தைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

16.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | விந்தியம் | A | ரஷ்யா |
| (ii) | அட்லஸ் | B | வட அமெரிக்கா |
| (iii) | யூரல் | C | இத்தாலி |
| (iv) | அப்பினைன் | D | வட ஆபிரிக்கா |
| (v) | அப்பலாச்சியன் | E | இந்தியா |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (......)

17.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கொன்ஸ்தாந்திநோபிளின் வீழ்ச்சி | A | பிரெஞ்சுப் புரட்சி |
| (ii) | வொஸ்டன் தேனீர் விருந்து | B | மறுமலர்ச்சி |
| (iii) | பஸ்ரீல் கோட்டையின் தகர்ப்பு | C | முதலாம் உலகப்போர் |
| (iv) | பிரான்ஸிஸ் பேர்டினன்து இளவரசரின் படுகொலை | D | இரண்டாம் உலகப் போர் |
| (v) | போலாந்து மீதான ஜேர்மனியின் படையெடுப்பு | E | அமெரிக்கப் புரட்சி |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (......)

18.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | மக்கியாவெலி | A | "இருநகரங்களின் கதை" (A Tale of Two Cities) |
| (ii) | அடம் ஸ்மித் | B | "டாஸ் கப்பித்தால்" (Das Capital) |
| (iii) | சார்ள்ஸ் டிக்கின்ஸ் | C | "இளவரசர்" (The Prince) |
| (iv) | கார்ள் மார்க்ஸ் | D | கீதாஞ்சலி |
| (v) | ரவீந்திரநாத் தாகூர் | E | நாடுகளின் செல்வம் (Wealth of Nations) |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (......)

[பக். 3 ஐப் பார்க்க

19. X | Y

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கிறிஸ்தோபர் கொலம்பஸ் | A | பசுபிக் சமுத்திரம் கண்டு பிடிக்கப்பட்டமை |
| (ii) | வாஸ்கொடகாமா | B | புது உலகம் கண்டு பிடிக்கப்பட்டமை |
| (iii) | வாஸ்கோ டி பல்போரன் | C | உலகைச் சுற்றிக் கடல்வழிப்பிரயாணம் செய்தமை |
| (iv) | பேர்டினந்து மகலன் | D | ஆஸ்திரேலியாவைக் கண்டு பிடித்தமை |
| (v) | ஜேம்ஸ் குக் | E | கீழைத் தேயங்களுக்கான கடல்வழிப் பாதையைக் கண்டுபிடித்தமை |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

20.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | நிக்கலஸ் கோர்ப்பேணிக்கஸ் | A | பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு |
| (ii) | வில்லியம் ஹார்வி | B | பரஸ்பரத் தொடர்புக் கோட்பாடு |
| (iii) | ஐசக் நியூட்டன் | C | பிரபஞ்சச் சுழற்சிக் கோட்பாடு |
| (iv) | சார்ள்ஸ் டாவின் | D | சூரியனை மையப்படுத்திய பிரபஞ்சக் கோட்பாடு |
| (v) | அல்பேர்ட் அயின்ஸ்ற்றீன் | E | இரத்த ஓட்டச் சுழற்சிக் கோட்பாடு |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

21.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | பிறேசில் | A | டச்சு |
| (ii) | கியூபா | B | போர்த்துக்கேயர் |
| (iii) | இந்தோனிசியா | C | பிரான்ஸ் |
| (iv) | இந்தோசைனா | D | பிரித்தானியா |
| (v) | கென்யா | E | ஸ்பெயின் |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

22.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | பதினான்காம் லூயி | A | நிரந்தரப் புரட்சி |
| (ii) | நெப்போலியன் போனபாட் | B | ஒரு நாட்டுச் சோசலிசம் |
| (iii) | லியோன் ற்றொற்ஸ்கி | C | "நானே அரசு" |
| (iv) | யோசெப் ஸ்டாலின் | D | ஹரிசனங்கள் கடவுளின் பிள்ளைகளாவர் |
| (v) | மகாத்மா காந்தி | E | "நானே புரட்சி" |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

23.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஜோன் கே | A | வானொலி கண்டு பிடித்தமை |
| (ii) | ஜோர்ஜ் ஸ்டிவன்சன் | B | மின்குமிழ் கண்டு பிடித்தமை |
| (iii) | கூலியெல்மோ மார்க்கோனி | C | தொலைபேசி கண்டு பிடித்தமை |
| (iv) | அலெக்ஸாண்டர் கிரகம்பெல் | D | புகையிரத இயந்திரம் கண்டு பிடித்தமை |
| (v) | தோமஸ் எடிசன் | E | பறக்கும் தட்டைக் கண்டு பிடித்தமை |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

24.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கானா | A | யூலியஸ் நைரேரி |
| (ii) | கென்யா | B | பற்றிஸ் லுமும்பா |
| (iii) | உகண்டா | C | மெல்டன் ஒபோட்டே |
| (iv) | தன்சேனியா | D | குவாம் நிக்குருமா |
| (v) | கொங்கோ | E | யோமோ கென்யாட்டா |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

25.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | சர்வதேச நீதிமன்றம் (ICJ) | A | வாஷிங்ற்றன் |
| (ii) | ஐக்கிய நாடுகள் சிறுபிள்ளைகள் நிதியம் (UNICEF) | B | வியன்னா |
| (iii) | உலகவங்கி (WB) | C | ஜெனீவா |
| (iv) | உலக சுகாதார நிறுவனம் (WHO) | D | ஹேக் |
| (v) | சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA) | E | நியூயோர்க் |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (……)

[பக். 4 ஐப் பார்க்க

● **26 - 30** வரையுள்ள வினாக்களில் **சரியான** விடையைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

26. **"ரோமியோவும் யூலியட்டும்" என்ற நாடகத்தை எழுதியவர் யார் ?**
(1) தோமஸ் மோர்
(2) எட்மண்ட் ஸ்பென்ஸர்
(3) கிறிஸ்ரோபர் மாலோவ்
(4) வில்லியம் ஷேக்ஸ்பியர்
(5) பென் ஜோன்சன் (……)

27. **ஜேர்மனியை ஒன்றிணைப்பதற்கு 'போரும் இரும்பும்'** ('blood and iron') **என்ற கொள்கையைக் கடைப்பிடித்த தலைவரை அடையாளம் காண்க.**
(1) கவூவர்
(2) கரிபோல்டி
(3) பிஸ்மார்க்
(4) பிரெட்ரிக் ஈபேர்ட்
(5) ஹின்டன் பேர்க் (……)

28. **ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது ஆசிய பொதுச் செயலாளர் யார் ?**
(1) டாக் ஹமர்ஸ்யோல்ட்
(2) யூதான்ற்
(3) குரீட் வல்ட்ஹைம்
(4) பூத்ரோஸ் பூத்ரோஸ் காலி
(5) கோ.்.பி அனான் (……)

29. **சீன மக்கள் குடியரசின் முதலாவது பிரதமமந்திரி யார் ?**
(1) ஸன் யட்-சென்
(2) சியங் காய்-ஷெக்
(3) டெங் ஷியாவோ-பிங்
(4) மா ஸே-துங்
(5) சூ வென்-லாய் (……)

30. **வங்காளதேசத்தின் முதலாவது பிரதமர் யார் ?**
(1) அயுப்கான்
(2) சுல்பிகார் அலி பூட்டோ
(3) ஷைக் முஜிபுர் ரஹ்மான்
(4) ஷைக் ஹசீனா
(5) காலிதா ஷியா (……)

● **31 - 35** வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல்** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ……………… **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ……………… **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ……………… **3** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ……………… **4** எனவும்

ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரியாயின் ……………… **5** எனவும் **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரி |

31. **மேல்வருவனவற்றுள் எவை எதிர் சீர்திருத்தத்தோடு தொடர்புடையவை ?**
(A) பாவமன்னிப்புப் பத்திர விற்பனை
(B) ஜெனீவாவில் கல்வியினுடைய இறையியலாட்சி
(C) ற்றென்ர் மகாநாடு
(D) சமயநெறி ஒப்புக்கொள்ளாதோருக்கு மரண தண்டனை (……)

32. **கீழைத்தேயங்களிலுள்ள ஒல்லாந்தரின் சாம்ராச்சியம் தொடர்பாக மேல்வருவனவற்றுள் எது / எவை சரியானது / சரியானவை ?**
(A) கிழக்கிலே ஒல்லாந்தரின் சாம்ராச்சியத்தை ஏற்படுத்தியவராக ஜேரர்ன் பீற்றசன் கூன் கருதப்படுகிறார்.
(B) ஒல்லாந்தர் சாம்ராச்சியத்தின் தலைமை நிர்வாக நிலையம் பற்றேரியாவில் அமைக்கப்பட்டிருந்தது.
(C) ஒல்லாந்தார் 1641 இல் மக்காவோவைக் கைப்பற்றினார்கள்.
(D) 1796 இல் இந்தோனேசியாவிலிருந்து ஒல்லாந்தரைப் பிரித்தானியர்கள் வெளியேற்றினார்கள். (……)

33. **இத்தாலிய பாஸிஸம் தொடர்பாக மேல்வரும் கூற்றுகளுள் எது / எவை சரியானது / சரியானவை ?**
(A) வைமார் குடியரசின் குறைபாடுகள் இத்தாலியிலே பாஸிஸம் எழுச்சி பெறுவதற்கு வழிவகுத்தன.
(B) பெனிற்றோ முஸோலினி இத்தாலிய பாஸிச வாதிகளின் தலைவராவார்.
(C) பெனிற்றோ முஸோலினி 1922 இல் இத்தாலியில் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.
(D) பாஸிஸ இத்தாலி 1935 இல் ஜேர்மனி மீது படையெடுத்தது. (……)

[பக். 5 ஐப் பார்க்க

34. **மேல்வரும் குறிப்புகளில் இரண்டாம் உலகப்போருக்கான காரணங்களைப் பற்றியவை எவை ?**
   (A) 1919 - 1920 ஆகிய காலத்து சமாதான உடன்படிக்கைகள் தோல்வி கண்டமை
   (B) சர்வதேச சங்கம் தோல்வி கண்டமை
   (C) ஜேர்மனியில் நாட்சிஸம் எழுச்சி பெற்றமை
   (D) ஜப்பானில் ராணுவவாதம் மேலோங்கியமை (……)

35. **மேல்வருவனவற்றுள் ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையின் அங்கத்துவ நாடுகள் யாவை ?**
   (A) ஐக்கிய அமெரிக்கா
   (B) ஜேர்மனி
   (C) ரஷ்ய சமஷ்டி இராச்சியம்
   (D) இத்தாலி (……)

● **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து **அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும், முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|
| 36. கீழைத்தேயங்களில் அமைந்த போர்த்துக்கேயரின் வர்த்தக சாம்ராச்சியத்தின் சிற்பி என்று அல்பென்ஸோ த அல்பர்கேர்க் கருதப்படுகிறார். | அல்பொன்சோ த அல்பர் கேர்க் போர்த்துக்கேய சாம்ராச்சியத்தின் தலைமையகத்தை மலாக்காவில் அமைத்தார். | (……) |
| 37. தோமஸ் ஹொப்ஸ் தனது பிரசித்தமான லெவியதன் என்னும் நூலில் அதிகாரங்களின் வேறாக்கம் பற்றிய கோட்பாட்டை விளக்கினார். | அபின் போரின் முடிவில் எழுதிய நன்கின் உடன்படிக்கை மூலம் ஹொங்கொங் பிரித்தானியருக்கு வழங்கப்பட்டது. | (……) |
| 38. சில இந்திய வரலாற்று ஆசிரியர்கள் 1857 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியை இந்தியாவின் முதலாவது சுதந்திரப் போராகக் கருதுகின்றனர். | சீயம் நாட்டில் மொங்குத் ஆரம்பித்த நவீன மயமாக்கத்தை சூல லொங்கோண் மேலும் பலப்படுத்தினார். | (……) |
| 39. ‘வெள்ளையருக்கே ஆஸ்திரேலியா’ என்ற கொள்கையின் அடிப்படையில் ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆசிய நாட்டவர்கள் அங்கே நுழைவதற்கு ஊக்குவித்தது. | தென்னாபிரிக்க அரசாங்கம் கடைப்பிடித்த சமூக இணைப்புக் கொள்கை அப்பாதீட் என்று சொல்லப்படும். | (……) |
| 40. இரண்டாம் உலகப்போரின் விளைவாக ஐம்பது மில்லியன் அளவான மக்கள் மரணம் அடைந்ததோடு பல லட்சக் கணக்கான வீடுகளும் பல நகரங்களும் அழிந்தன. | இரண்டாம் உலகப்போரில் ஏற்பட்ட பேரழிவுகள் நிகரில்லாதவை; மனித வரலாற்றில் இப்போரைப் போல உயிர்ச் சேதமும் சொத்துடைமைகள் அழிவும் வேறு எப்போரிலும் இடம்பெறவில்லை. | (……) |

* *

[பக். 6 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25-C T II

## நவீன உலக வரலாறு - கி.பி. 1500 - 1989

**அறிவுறுத்தல்கள்:**

* **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **உலகப் புறவுருவப் படம்** வழங்கப்படும்.)

### பகுதி II

1. மேலே தரப்பட்டுள்ள **எல்லாப்** பெயர்களையும் உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிட்டு, அவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.
(i) கனடா (ii) அந்தீஸ் மலைகள் (iii) மகலன் நீரிணை
(iv) ஆங்கிலக் கால்வாய் (v) கஸ்பியன் கடல் (vi) எகிப்து
(vii) போர்ணியோ (viii) வைஜிங்
*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **ஒவ்வொரு** புள்ளி; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் **ஐந்து** புள்ளிகள்)*

2. "நவீன ஐரோப்பாவின் உற்பத்தியை மறுமலர்ச்சி பிரதிபலிக்கின்றது."
(i) மறுமலர்ச்சி ஆரம்பமாகிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
(ii) மறுமலர்ச்சிக் காலத்து எழுத்தாளர் **இருவரினதும்** கலைஞர்கள் **இருவரதும்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iii) மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஏதுவான **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*
(iv) 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியப் பண்பாடும் சிந்தனை மரபும் தொடர்பாக ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்து முன்னே தரப்பட்ட கூற்றினை பரிசீலிக்குக. *(08 புள்ளிகள்)*

3. (i) ஐரோப்பாவிலே கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டமைக்கு ஏதுவான பிரதானமான காரணிகளைப் பரிசீலனை செய்க. *(07 புள்ளிகள்)*
(ii) அதன் விளைவுகளைப் பரிசீலனை செய்க. *(07 புள்ளிகள்)*

4. "பிரெஞ்சுப் புரட்சி மத்தியதர வர்க்கத்தின் புரட்சி என்று வர்ணிக்கப்பட்டுள்ளது."
(i) பிரெஞ்சுப் புரட்சி ஏற்படும் தறுவாயிலே கூடிய பிரான்சின் பிரதிநிதித்துவ சபையின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
(ii) புரட்சி ஏற்படுவதற்கு முன் பிரான்சில் வாழ்ந்த தத்துவஞானிகள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iii) புரட்சி ஏற்பட்ட காலத்திற் பிரான்சில் ஆட்சி புரிந்த அரசரதும் அவரது இராணியினதும் பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iv) மேலே தரப்பட்ட கூற்றினைப் பிரெஞ்சுப் புரட்சிக்கு ஏதுவான காரணங்கள், அதன் விளைவுகள் பற்றி நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(09 புள்ளிகள்)*

5. புதிய ஏகாதிபத்தியம் எவ்வாறு முதலாம் உலகப்போருக்கு வழிவகுத்தது என்பதைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

6. மேல்வரும் தலைப்புகள் தொடர்பாக 1919 – 1931 ஆகிய காலப்பகுதியில் மகாத்மா காந்தியின் தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் மேற்கொண்ட பணிகளை பின்வரும் தலைப்புகளின் கீழ் பரிசீலனை செய்க.
(i) ஒத்துழையாமை இயக்கம்
(ii) சட்டமறுப்பு இயக்கம் *(14 புள்ளிகள்)*

7. "சீனாவில் ஏற்பட்ட பொதுவுடமைப் புரட்சி அடிப்படையில் விவசாயிகளின் புரட்சியாகும்."
(i) புரட்சிக்குத் தலைமை தாங்கிய சீன பொதுவுடமைக் கட்சியின் தலைவரின் பெயரை எழுதுக. *(01 புள்ளி)*
(ii) கூமின்ராங் என்னும் தேசிய கட்சியின் தலைவரின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
(iii) சீனப் புரட்சிக்கு அடிப்படையாக இருந்த விடயங்களைப் பற்றி ஒரு சிறுகுறிப்பு எழுதுக. *(04 புள்ளிகள்)*
(iv) சீனப் பொதுவுடமைக் கட்சியின் கொள்கை, புரட்சியின் விளைவுகள் என்பன தொடர்பாக மேலே குறித்த கூற்றினை ஆராய்க. *(08 புள்ளிகள்)*

[பக். 7 ஐப் பார்க்க

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்புரைகள் எழுதுக.

(i) ஐரோப்பாவிற் புதிய முடியாட்சிகள்
(ii) 1688–89 வருடத்து மாண்புமிகு புரட்சி
(iii) மைஜி மீட்பாட்சி
(iv) பொதுநலவாய அமைப்பு
(v) அணிசேரா இயக்கம்
(vi) வங்காளதேசம் உருவானமை

(ஒவ்வொன்றுக்கும் *07* புள்ளிகள்)

**9.** பகுதி **(A)** **அல்லது** பகுதி **(B)** விற்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** ஒரு வல்லரசு என்ற முறையில், இரண்டாம் உலகப்போரின் பின்னர் இரு தசாப்தங்களாகத் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கு ஐக்கிய அமெரிக்கா கடைப்பிடித்த கொள்கையை பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**(B)** சோவியத் ஒன்றியம் வீழ்ச்சி பெற்றமைக்கான பிரதான காரணிகளை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

* * *

e-thaksalawa The National e-learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

| | | | |
|---|---|---|---|
| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 25-C | T | |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ....................

